## சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2.1, 1.2.3, 1.2.4 ஆம் பந்திகளில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2012 ஆம் ஆண்டின் நிலையான சொத்துக்கள் கொள்வனவின் கொள்வனவுக் குழு படிகள் ரூபா 91,800 தொகை மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(ஆ) 11 மக்கள் சக்தி நிலையங்களைச் சுற்றி வேலிகள் நிர்மாணிக்கும் செயற்திட்டம்

(i) ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 9,359,784 தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணத் தொகையில் 2012 ஆம் ஆண்டின் போது தீர்க்கப்பட்டிருந்த முற்பணத் தொகை ரூபா 3,335,283 ஆன போதிலும் இது ரூபா 2,668,226 ஆக கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருந்தமையால் ரூபா 667,057 ஆல் முற்பணக் கணக்கு மீதி அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) ஒப்பந்தக்காரர்களுக்குச் செலுத்தப்பட்ட 6 பட்டியல்களின் பெறுமதியான ரூபா 16,676,415 தொகை நடைபெறும் வேலைக் கணக்கு மற்றும் ஒப்பந்தக் கணக்கில் பதியப்பட வேண்டிய போதிலும் இது ரூபா 13,341,132 ஆகப் பதிவு

செய்யப்பட்டிருந்தமையால் ரூபா 3,335,283 ஆல் அக் கணக்கு குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2.2 பெறவேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2010 ஆம் ஆண்டின் போது 05 நபர்களுக்கு கடன் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த ரூபா 1,723,450 பெறுமதியான 5 முச்சக்கர வண்டிகளின் பெறுமதி 48 தவணைகளில் முழுவதும் செலுத்தி முடிக்க வேண்டியதுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் அறவிடப்பட வேண்டிய மொத்தக் கடன் தவணைகளின் பெறுமதி ரூபா 896,194 ஆக இருந்தது. இருந்த போதிலும் அறவிடப்பட்டிருந்த தவணைகளின் பெறுமதி ரூபா 538,398 அளவாகக் காணப்பட்டது.

(ஆ) சுய தொழில் மற்றும் தொழில் முயற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2009 ஆம் ஆண்டின் போது 74 பேருக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 2,700,000 தொகையான கடன் தொகையில் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 1,500,550 தொகையான தவணைப்பணம் நிலுவையாகக் காணப்பட்டது.

(இ) பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பால் 2008 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்ட விழாக்களுக்காக இந்தியாவிலிருந்து புத்தகங்கள் இறக்குமதி செய்வதற்காக அப் பொறுப்பால் ரூபா 90,577 தொகை மன்றத்தால் செலுத்தப்பட்டிருந்ததுடன் அத் தொகை 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரை அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 கணக்காய்விற்குச் சான்றுகள் இன்மை

ஒவ்வொரு கணக்கு விடயங்களுக்கும் எதிரே காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராத காரணத்தால் அக் கணக்கு விடயங்கள் சான்றுறுதிப்படுத்துவதற்கோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

| விபரம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| | ரூபா | |
| காணி மற்றும் கட்டிடம் - கிரயம் | 347,402,548 | (i) உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்<br>(ii) நிலையான சொத்துக்கள் பதிவேடு<br>(iii) பொருள் மெய்மையாய்வு அறிக்கை<br>(iv) பட்டோலைகள் |
| நடைமுறையல்லாச் சொத்துக்கள் | 129,778,194 | (i) நிலையான சொத்துக்கள் பதிவேடு<br>(ii) பொருள் மெய்மையாய்வு அறிக்கை<br>(iii) பட்டோலைகள் |
| மகளிர் தின நிகழ்ச்சித்திட்டத்திற்காக 1250 கைப்பைகள் கொள்வனவு செய்தல் | 812,500 | (i) இருப்புப் பதிவேடு<br>(ii) பகிரப்பட்ட விதம் மற்றும் பெயர்ப் பட்டியல் |
| வீ – செட் முறைமை மற்றும் இணையதள வசதி வழங்கல் கட்டணம் | 5,213,760 | உரிய கம்பனியுடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை |
| மகளிர் தின நிகழ்ச்சித்திட்டத்திற்கான போக்குவரத்துக் கட்டணம் | 819,703 | (i) பயணித்த பயணிகளின் எண்ணிக்கை<br>(ii) சேவையைப் பெற்றுக்கொண்டமைக்கு பொறுப்பான உத்தியோகத்தரின் சான்றிதழ்<br>(iii) பயணித்த திகதி மற்றும் பயணித்த தூரம் |

## 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) (i) | 2005 இன் 19 ஆம் இலக்க சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்ற அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் 2,3,4 ஆம் பந்திகள் | அதிகாரம் மற்றும் செயற்பணியைச் செயற்படுத்துகையிலும் மேற்கொள்கையிலும் ஏற்பட்ட சகல செலவினத்தையும் மன்றம் கட்டியெழுப்பிய நிதியத்திலிருந்து ஏற்க வேண்டிய போதிலும் சகல செலவினங்களும் அமைச்சால் மீளளிப்புச் செய்யப்படுதல் அடிப்படையில் மாத்திரம் மன்றச் செயற்பாடுகள் செயற்படுத்தப்பட்டிருந்தன. |
| (ii) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 10(5) ஆம் பிரிவு | வங்கி மேலதிகப் பற்று வசதிகளுக்காக நிதி அமைச்சரினதும் உரிய அமைச்சரினதும் உடன்பாட்டைப் பெற்றுக்கொள்ளாது ரூபா 5,309,579 தொகையான வங்கி மேலதிகப் பற்று வசதிகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. |
| (iii) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தின் 10(1) மற்றும் (2) ஆம் பிரிவுகள் | 2012 ஆம் ஆண்டின் பெப்ரவரி முதல் திசெம்பர் வரை ஊழியரின் சம்பளத்தில் இருந்து அறவிடப்பட்ட பங்களிப்புத் தொகை மற்றும் தொழில் தருனரின் பங்களிப்புத் தொகைக் கூட்டுத்தொகையான ரூபா 1,015,811 தொகை ஊழியர் சேமலாப நிதியத்திற்குச் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதிய அதிகாரச்சட்டத்தின் II ஆம் பிரிவின் 16 i ஆம் பிரிவு | ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்பை அனுப்பிவைப்பதிலுள்ள தாமதத்தின் காரணமாக ரூபா 61,886 தொகையான தண்டப் பணம் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. |

| | |
|---|---|
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் நி.பி. 188 மற்றும் 323(1) மற்றும் (2) | மக்கள் சக்தி நிலையங்களில் செலவினத்தைத் தீர்ப்பதற்காகவும் கள உத்தியோகத்தர்களின் மாதாந்தக் கொடுப்பனவிற்காக ரூபா 16,005,017 தொகை மக்கள் சக்தி/ புதிய சக்தி செயற்திட்டத்திற்குப் பொறுப்பான 02 உத்தியோகத்தர்களின் இரண்டு தனியார் வங்கிக் கணக்குகளிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. |
| (இ) (i) 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய திறைசேரிச் சுற்றறிக்கை இல. 842 | நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 2007 ஆகஸ்ட் 24 ஆம் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை இல. 9/2007 (1)இன் இல.(i) மற்றும் (iv) ஆம் பந்தி | 60 வயதிற்கு மேற்பட்ட 5 உத்தியோகத்தர்கள் முறையான அங்கீகாரம் இன்றி ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு படிப்பணமாக ரூபா 2,487,600 தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. |
| (iii) 2000 யூன் 27 ஆம் திகதிய பீஈ/பீஎப்/09 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | 2009 ஆம் ஆண்டின் போது செலவின மீளளிப்பிற்காக அமைச்சிலிருந்த பெற்றுக்கொள்ளப்பட்ட பணத்தில் ரூபா 4,200,000 தொகை நிலையான வைப்பில் முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும் இதற்காக திறைசேரி அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (iv) 2006 செப்தெம்பர் 22 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறை அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. |

இல. 30

| | |
|---|---|
| (ஈ) 2011 சனவரி 01 ஆம் திகதிய கொள்வனவு கைநூலின் 20 ஆம் திகதிய மிகையில் ii ஆம் பந்தி | 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 3,732,100 தொகையான அவசர கொள்வனவு கொள்வனவு நடைமுறைக்கு மாறாக மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இதற்காக திணைக்களக் கொள்வனவுக் குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (உ) 2008 திசெம்பர் 29 ஆம் திகதிய பணிப்பாளர் சபைப் பத்திர இல. 102 | தொண்டமான் தொழிற்துறைப் பயிற்சி நிலையம் மற்றும் நோவுட் விளையாட்டுத் தொகுதியின் பாதுகாப்புச் சேவைக்கு நாளொன்றிற்கான அங்கீகரிக்கப்பட்ட வேலைக் காப்பு எண்ணிக்கைக்கு மேலாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமையால் அந் நிலையத்திற்காக ஒதுக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட செலவின எல்லைக்கு மேலாக ரூபா 3,147,050 தொகையன பாதுகாப்புச் செலவினம் ஏற்கப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் மன்றத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 54,307,157 பற்றாக்குறையானதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 38,064,921 ஆகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை ரூபா 16,242,236 ஆல் அதிகரித்திருந்ததுடன் ஆண்டிற்கான மொத்தச் செலவினம் ரூபா 20,117,042 ஆல் அதிகரித்தமை இதற்கு முக்கியமாகத் தாக்கமளித்திருந்தது.

## 2.2 பகுப்பாய்வு செய்யப்பட்ட நிதிமீளாய்வு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான நிதி விளைவுகள் பல்வேறு கட்டங்களில் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| விபரம் | திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கானது 2012 ஆம் ஆண்டு | 2011 ஆம் ஆண்டு | முரண் | முரண்களின் சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| வருமானம் | 106,342,779 | 102,467,975 | 3,874,804 | 4 |
| செலவினம் | 111,758,945 | 100,942,326 | 10,816,619 | 11 |
| வருடாந்த பெறுமானத்தேய்வு மற்றும் தீர்ப்பனவுச் செலவினம் சீராக்கப்படுவதற்கு முன்னரான இலாபம்/ நட்டம் | (5,416,165) | 1,525,649 | (6,941,814) | 554 |
| வருடாந்த பெறுமானத்தேய்வு மற்றும் தீர்ப்பனவுச் செலவின அளவு | 48,890,992 | 39,590,569 | 9,300,423 | 24 |
| வருடாந்த பெறுமானத்தேய்வு மற்றும் தீர்ப்பனவுச் செலவினம் சீராக்கப்பட்டதன் பின்னர் நட்டம் | (54,307,157) | (38,064,921) | (16, 242,236) | 43 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

மன்றத்தின் கீழ் செயற்படும் நிறுவனங்களின் செயலாற்றல் பின்வருமாறாகக் காணப்பட்டது.

(i) மக்கள் சக்தி மற்றும் புதிய சக்தி செயற்திட்டத்தின் கீழ் 45,000 நபர்களுக்கு தகவல் தொழிநுட்ப பயிற்சி மற்றும் 200

இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு சந்தர்ப்பங்களை வழங்குவதற்காக ரூபா 80.5 மில்லியன் தொகை செலவிடப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 32,556 நபர்களுக்கு தகவல் தொழிநுட்பப் பயிற்சியும் 36 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பும் வழங்கப்படுவதற்காக ரூபா 66.07 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

(ii) தொண்டமான் கலாச்சார நிலையத்தின் பயிற்சிக்காக ஒரு பயிலுனருக்காக ரூபா 38,750 தொகைப்படி 240 பயிலுனர்களுக்காக ரூபா 9.3 மில்லியன் மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் 60 பயிலுனர்களுக்காக ரூபா 7.97 மில்லியன் செலவிடப்பட்டிருந்தமையால் உள்ளபடியான செலவினம் மதிப்பீட்டுச் செலவினத்தினை விட ரூபா 94,083 ஆல் அதிகரித்திருந்தது. ஆண்டின் இறுதியில் உள்ளவாறு பயிற்சி பெற்றிருந்த பயிலுனர்களின் எண்ணிக்கை 38 வரை குறைவடைந்திருந்தது.

(iii) நோவுட் விளையாட்டுத் தொகுதியானது ரூபா 3.6 மில்லியன் செலவில் மீளாய்வாண்டின் போது 1000 இளைஞர்களுக்கு விளையாட்டு வசதிகளை வழங்குவதற்காகத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 1.99 மில்லியன் செலவில் 83 இளைஞர்களுக்கு மாத்திரம் விளையாட்டு வசதிகள் வழங்கப்பட்டிருந்தமையால் ஒரு இளைஞனுக்காக ஏற்கப்பட்ட உள்ளபடியான செலவின மதிப்பீட்டை விஞ்சி ரூபா 20,376 ஆல் அதிகரித்திருந்தது.

**3.2 முகாமைத்துவ திறமையீனங்கள்**

மக்கள் சக்தி நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ள காணிகள், மன்றத்திற்குக் கையேற்கப்படுவதற்கு காணிகளை அளப்பதற்காக 2012 ஆம் ஆண்டு வரை ரூபா 2,319,298 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியிலும் அளவிடப்பட்ட காணிகள் மன்றத்தினால் கையேற்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மன்றத்தின் செலவினங்கள் மீளளிக்கப்படுவதற்காக அமைச்சிடமிருந்து பெறப்பட்ட காசோலைகள் மூலம் வங்கியினூடாக கொள்வனவு செய்யப்பட்டதன் மூலம் (Cheque Purchasing) காசாக்கப்பட்டிருந்தமையால் ரூபா 532,789 தொகையான மிகையான செலவினத்தை ஏற்க வேண்டியிருந்தது.

(ஆ) ஏழைப் பிள்ளைகளுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படுவதற்காக 120,000 அப்பியாசக் கொப்பிகள் கொள்வனவு செய்யப்படுவதற்காக அரச நிறுவனம் ஒன்றிற்கு மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 2,000,000 தொகையான முற்பணத் தொகைக்குரிய 26,841 புத்தகங்கள் 2013 சனவரி மாதம் பெறப்பட்டிருந்த போதிலும் அப் புத்தகங்கள் 2013 ஒக்டோபர் மாதம் வரை பிள்ளைகளுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 ஒப்பந்த நிர்வாகக் குறைபாடுகள் - இறம்பொட கலாச்சார நிலையம்

பின்வரும் விடயங்கள் அவதானிகப்பட்டன.

(அ) நிலைய வளாகத்தில் ரூபா 9,591,320 பெறுமதியான உள்ளக வீதி நிர்மாணிப்பு மற்றும் காபட் இடலுக்காக உடன்படிக்கை ஏற்படுத்தப்படாமல் 2012 ஒக்டோபர் 11 ஆம் திகதி ரூபா 1,918,264 தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணத் தொகை ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரை உரிய பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. முற்பண உத்தரவாத செல்லுபடிக் காலம் 2013 மார்ச் 17 ஆம் திகதி பூர்த்தியாகியிருந்த போதிலும் அம் முற்பணத் தொகை தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிலையத்தின் விளையாட்டு மைதானம், வலைப்பந்து, கரப்பந்து மற்றும் கால்பந்துத் திடல்களை தயாரிக்கும் பணிக்காக ரூபா 8,501,568 பெறுமதியான ஒப்பந்த உடன்படிக்கை 2011 திசெம்பர் 26 ஆம் திகதி ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன் வேலை ஆரம்பிப்பு முற்பணமாகவும் முதலாவது கொடுப்பனவாக ரூபா 3,700,313 தொகை ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. வேலை ஆரம்பிப்பு முற்பணம் பெறப்பட்டு 07 நாட்களில் வேலை

ஆரம்பிக்கப்பட்டு 06 மாதங்களில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் முறையான அதிகாரப்பொறுப்பின்றி மன்றத்தின் நிதிப் பிரதிப் பணிப்பாளரால் ஒப்பந்தக் காலம் நீடிக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் தினமாகிய 2013 ஒக்டோபர் 13 இல் உள்ளவாறும் அவ் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இதற்காக செயலாற்றல் பிணை பெறப்பட்டிராததுடன் பெறப்பட்டிருந்த முற்பணப் பிணையின் செல்லுபடிக் காலமும் 2012 நவம்பர் பூர்த்தியாகியிருந்த போதிலும் இது புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

இவ்வாறே 2012 ஆகஸ்ட் 13 ஆம் திகதியின் பின்னர் ஒப்பந்தச் செயற்பாடுகளை மேற்கொண்டிராத இவ் ஒப்பந்தக்காரர்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் மன்றத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 2010 ஆம் ஆண்டின் போது உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு 2011 மார்ச் 15 ஆம் திகதி பூர்த்திசெய்யப்படுவதற்கிருந்த கட்டிடங்களுக்காக நீர் வழங்கலுக்கான ரூபா 2,236,883 பெறுமதியான ஒப்பந்தத்தில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செய்யப்பட்ட வேலைப் பெறுமதி ரூபா 743,647 ஆன போதிலும் இதற்கு உரித்தான கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக உரிய கோவைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2010 ஆம் ஆண்டில் உடன்படிக்கை கைச்சாத்திட்டு 2011 செப்தெம்பர் 30 ஆம் திகதி பூர்த்திசெய்யப்படுவதற்கிருந்த போதிலும் ஆண் விடுதிகளின் நிர்மாணிப்பிற்கான ரூபா 23,713,083 பெறுமதியான ஒப்பந்தத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செய்யப்பட்ட வேலைக்கான பெறுமதி ரூபா 8,590,462 ஆகக் காணப்பட்டதுடன் 2013 ஏப்ரல் 29 ஆம் திகதி மன்றத்தின் பிரதிப் பணிப்பாளர் (நிதி) யின் கடிதத்தின் பிரகாரம் 2011 நவம்பர் மாதத்தின் பின்னர் இவ் ஒப்பந்தத்தின் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. இதற்கு உரித்தான கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக உரிய கோவைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) நிலையத்தின் நீர் வளங்களிலிருந்து நீர் வழங்கல் முறைமை ஒன்றை நிர்மாணிக்கப்படுவதற்காக ரூபா 1,787,925 பெறுமதியான ஒப்பந்த உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருந்த போதிலும் மன்றத்தின்

தலைவரால் இதற்கு கையொப்பமிட்டு உடன்படிக்கை ஏற்புடையதாக்கப்பட்டிருக்கவில்லை. அவ் உடன்படிக்கையின் பிரகாரம், ஒப்பந்தக் காலம் ஓர் மாதமாவதுடன் முறையான அதிகாரமின்றி மன்றத்தின் பிரதிப் பணிப்பாளர் (நிதி) யால் இரு சந்தர்ப்பங்களின் போது உடன்படிக்கைக் காலம் நீடிக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் தினமாகிய 2013 ஒக்டோபர் 10 ஆம் திகதியளவில் ஒப்பந்தச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ் ஒப்பந்தக்காரருக்கு ரூபா 357,585 தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் முற்பணங்கள் பிணையின் செல்லுபடிக் காலம் 2012 ஆகஸ்ட் 20 ஆம் திகதி பூர்த்தியாகியிருந்ததுடன் அது புதுப்பிக்கப்படுவதற்கோ அல்லது முற்பணத் தொகை தீர்க்கப்படுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மன்றத்தின் தலைமை அலுவலகத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணி உள்ளடக்கப்பட்டிராத இரு பதவிகளுக்காக இரு உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டில் ரூபா 1,452,000 தொகை கொடுப்பனவாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்திற்கான பதவியணிக்கான சம்பள மட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மக்கள் சக்தி செயற்திட்டத்திற்காக 2011 ஆம் ஆண்டின் போது அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் சம்பள மட்டங்களின் படி உரிய பதவிகளுக்கு ஏற்றவர்களை ஆட்சேர்த்திராத போதிலும் 2006 ஆம் ஆண்டின் போது ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட ஓர் உத்தியோகத்தர் 2012 ஆம் ஆண்டின் இறுதி வரை சேவையில் ஈடுபடுத்தப்பட்டு மீளாய்வாண்டின் போது ரூபா 480,000 தொகையான வருடாந்த சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சேவையில் ஈடுபட்டுள்ள 90 கள ஒருங்கிணைப்பாளர்களுக்காக 2010 ஆம் ஆண்டு முதல் 2012

ஆம் ஆண்டு வரை ரூபா 18,157,500 தொகையான கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்தது. அவர்களின் செய்யப்பட்ட வேலைக்கான அறிக்கையின் பிரகாரம் அவ் உத்தியோகத்தர்களிடமிருந்து மன்றத்திற்குக் கிடைக்கப்பெற்ற நலன் தொடர்பாக திருப்திகொள்ள முடியாதிருந்தது.

**4. கணக்களிப் பொறுப்பும் நல்ஆளுகையும்**

**4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

பீஈடீ/12 ஆம் இலக்க 2003 யூன் 02 ஆம் திகதிய பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மன்றத்தால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 07 மாத காலதாமதத்தின் பின்னர் 2013 செப்தெம்பர் 23 ஆம் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**4.2 செயல் நடவடிக்கைத் திட்டம்**

கூட்டுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட விடயங்களை மேற்கொள்வதற்காக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 உள்ளகக் கணக்காய்வு**

ஆண்டின் போது உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று செயற்பட்டிருக்கவில்லை.

**4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.5 கொள்வனவுத் திட்டம்**

மீளாய்வாண்டிற்காக மன்றத்தால் தயாரிக்கப்பட்ட கொள்வனவுத் திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.6 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதீட்டு தரவுகளுக்கும் உள்ளபடியான தரவுகளுக்கிடையேயான முரணின் சதவீதம் 21 சதவீதம் முதல் 455 சதவீதம் வரையாகக் காணப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.7 வருடாந்த அறிக்கையை முன்வைத்தல்

மன்றம் ஆரம்பிக்கப்பட்ட 2005 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையான வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) ஒப்பந்த நிர்வாகம்
(ஆ) பதவியணியினர் நிர்வாகம்
(இ) நிதிக் கட்டுப்பாடு
(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(உ) சொத்துக்கள் நிர்வாகம்
(ஊ) பெறவேண்டிய கணக்குகள்
(எ) செயலாற்றல்